දුරකථන )
தொலைபேசி ) 011-2559250
Telephone ) 011-2368144

ෆැක්ස් )
பெக்ஸ் ) 011-2368583
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி )dnutri@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் )www.health.gov.lk
website )

මගේ අංකය )
எனது இல )PA/NUT/HB/16/2013
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி ) 03/03/2014
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

சுற்றறிக்கை இலக்கம்: 02-45/2014

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
பணிப்பாளர்கள்/ போதனா வைத்தியசாலை
விசேட திட்டத் தலைவர்கள்
சுகாதார அமைச்சின்கீழ் உள்ள எல்லா நேரடியான நிறுவனங்கள்
பணிப்பாளர்கள்/ மருத்துவ கண்காணிப்பாளர்கள் / மாவட்ட வைத்திய அதிகாரி /
சுகாதார வைத்திய அதிகாரி / பொறுப்பான வைத்திய அதிகாரி

<u>புதிய பாலை இலங்கையில் ஊக்குவித்தல்</u>

இலங்கையில் புதிய பால் மற்றும் பாற்பொருட்களான தயிர், யோக்கட் போன்றன நீண்ட காலமாக மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. புதிய பாலானது, இலங்கையின் இயற்கையான புல்நிலங்களில் மேயவிடப்பட்ட பசுக்களிலிருந்து பெறப்படும் ஊட்டச்சத்தான உணவாகும்.
பாலின் ஊட்டச்சத்து இழப்பை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு பாலின் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையேயான நேர இடைவெளி குறைவாக வைத்திருக்க வேண்டும்.
எனவே புதிய பாலினை அதிகளவான அத்தியாவசியமான கொழுப்பமிலங்கள், அமினோ அமிலங்கள், விற்றமின்கள் மற்றும் தாதுப்பொருட்களடங்கிய ஊட்டச்சத்துமிக்க உணவாக கருதலாம்.

மேலும், வழக்கமான பால்மா உற்பத்தியின் போது பாதகமான விளைவை ஏற்படுத்தும் பல இரசாயன பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. இலங்கை உட்பட பல நாடுகளில் இது சம்பந்தமாக பல பிரச்சினைகள் ஏற்பட்டதற்கான நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன.

உதாரணமாக

- பாலில் மெலமைன் (melamine) சேர்க்கப்படுவதால் நோய்வாய்ப்பட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளதுடன் மேலும் சிறுநீரகக் பாதிப்பால் இறப்புக்களும் பதிவாகியுள்ளது.

- இறக்குதி செய்யப்படும் சில பால்மா வகைகள் பொட்டுலினியதுடன் (botulinum) மாசடையும் அபாயம் இருப்பதால் அவற்றின் இறக்குமதிகளை கட்டுப்படுத்தல் வேண்டும்.

- பால்மாவில் டி.சி.டி (D.C.D) கலப்படம் சேர்க்கப்பட்டுள்ளது பற்றிய அறிக்கைகளால் நாட்டில் அச்ச நிலை காணப்பட்டது.

மேலும், புதிய பாலை ஊக்கிவிப்பதன் மூலம் அதிகளவில் அன்னிய செலாவனியை மீதப்படுத்த முடியும் அத்துடன் உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

சுகாதார அமைச்சானது, இலங்கை மக்களுக்கு பொருளாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நன்மைகளை வழங்குவதற்காக பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க முடிவுசெய்துள்ளது.

1. இந்த சுற்றறிக்கையின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு உங்கள் நிறுவன உத்தியோகத்தர்கள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

2. உங்கள் நிறுவனங்களில் பாவனைக்காக கொள்வனவு செய்யும்போது புதிய பாலை வாங்குவதற்கு விரும்புதல்.

3. திரவப்பால் சேமிப்பதற்கான வசதிகளை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. நிறுவனத்துடன் இணைந்த உணவகம் மற்றும் பிற விற்பனை நிலையங்களில் புதிய பால் மற்றும் உள்நாட்டு பால் உற்பத்திப் பொருட்களான தயிர், யோக்கட் போன்றவற்றின் விற்பனையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல்.

5. முடிந்தவரை சுகாதாரக்கல்வி நிகழ்வுகளில் புதிய பாலை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

இந்த சுற்றறிக்கையில் உள்ள உள்ளடக்கங்களை உங்கள் நிறுவனத்தில் உள்ள அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வாருங்கள்.

.................................................

வைத்தியர். வை.டி. நிகால் ஜெயதிலக
செயலாளர் - சுகாதார அமைச்சு
சுவசிரிபாய.

Dr. Y. D. Nihal Jayathilaka
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.

பிரதிகள்:-

1. மேலதிக செயலாளர் - சுகாதார அமைச்சு
2. மாகாண சுகாதார சேவைகள் செயலாளர்
3. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
4. மேலதிக பணிப்பாளர் நாயகம் (பொ.வை.சே)I & II
5. மேலதிக பணிப்பாளர் நாயகம் (மருத்துவம்)
6. பணிப்பாளர்/ குடும்ப சுகாதார பணியகம்
7. பணிப்பாளர்/சுகாதாரக் கல்விப் பணியகம்
8. பணிப்பாளர்/நகர மற்றும் தோட்ட சுகாதாரம்
9. பணிப்பாளர்/சுற்றுச்சூழல் மற்றும் தொழிற் சுகாதாரம்
10. பணிப்பாளர்/மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்
11. பணிப்பாளர்/போசாக்குப் பிரிவு
12. பணிப்பாளர்/போசாக்கு ஒருங்கிணைப்புப் பிரிவு
13. பணிப்பாளர்/தொற்றாத நோய்ப்பிரிவு